செய்தி வெளியீடு எண்:474 நாள்:20.07.2021

# செய்தி வெளியீடு

**“இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் இந்தியக் கடல்சார் மீன்வள மசோதா, 2021-ஐ, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டாம்” – மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்.**

****

நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரின்போது ஒன்றிய அரசு நிறைவேற்ற உத்தேசித்துள்ள இந்தியக் கடல்சார் மீன்வள மசோதா 2021, “இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் உள்ளதால், அதனை நாடாளுமன்றத்தில் முன்மொழிய வேண்டாமென்று வலியுறுத்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று கடிதம் எழுதியுள்ளார்.

ஒன்றிய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள இந்தியக் கடல்சார் மீன்வள மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், கடலோர மீனவர் சமூகங்களின் நலன்களுக்கு எதிராக உள்ளது என்றும், இந்திய அரசியலமைப்பின் 7-வது அட்டவணையின் மாநிலப் பட்டியலின்கீழ் மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை மீறும் சில உட்பிரிவுகளைக் கொண்டுள்ளதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள மசோதாவில் உள்ள சில பிரிவுகளில், மீனவர்கள்மீது குற்றச்சாட்டு சுமத்துதல் (Criminalisation), சிறையில் அடைத்தல், மீனவர்களுக்கு எதிராக வலிய நடவடிக்கைகளை எடுத்தல் (Use of force), கட்டணங்களை விதிப்பது, பெரும் அபராதங்களை விதிப்பது போன்ற மீனவர்களுக்கு எதிரான உட்பிரிவுகள் இருப்பதால், இது பரவலாக எதிர்ப்புக்களையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டாம் என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைத்துத் தரப்பு மக்களுடன் விவாதம் மற்றும் ஆலோசனைகள் நடத்தியபிறகு, அவர்களின் கருத்துகளைப் பெற்று, மீனவர் நலன் காக்கும் வகையிலும், கடல் வளத்தைக் காக்கும் வகையிலும், புதியதொரு மசோதாவை நாடாளுமன்றத்தில் பின்னர் தாக்கல் செய்யலாம் என்று தெரிவித்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தியக் கடல்சார் மீனவர் மசோதா 2021-ஐ நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் முயற்சியினை தொடர வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதாகத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*****

**P.R.No: 474** **Date: 20.07.2021**

# PRESS RELEASE

**Text of the D.O. Letter No.7117/FS.IV/2019, dated 20-7-2021 of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon'ble Prime Minister of India, requesting not to proceed with the moving of the Indian Marine Fishermen Bill, 2021.**

I wish to bring to your kind attention, an important issue, which is of grave concern to Tamil Nadu, particularly among the coastal districts of the State.

The Union Government has recently proposed to move the Indian Marine Fisheries Bill, 2021 during the current session of the Parliament. Many provisions in the proposed Bill go against the interests of the local fishermen communities and certain clauses infringe upon the rights conferred to the States under the State List of the 7th Schedule of Constitution of India.

It appears that the Bill is being moved without adequately addressing the concerns and well-being of Indian fishermen who are traditionally engaged in this for their livelihood for generations.

While we understand and appreciate the need to protect and preserve the marine eco system, we also consider it equally important that the livelihood and interests of the traditional fishermen are clearly protected.

As the proposed Bill has many disturbing clauses, like criminalisation and imprisonment of fishermen, use of force against fishermen, levy of charges, levy of huge penalties etc., it has resulted in widespread protests and disquiet, I urge you not to move the Bill and also put it across for wider debate and discussions. After obtaining the views of the stakeholders on the Bill in its present form, a decision on moving a fresh Bill that addresses the concerns of the fishermen communities, may be taken.

Considering the above, I once again urge you not to proceed with the moving of the Indian Marine Fishermen Bill, 2021.

******

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**